Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், அக்டோபர் 24, 2024 | இதழ் 194

# சார்பதிவாளர், ஆர்.டி.ஓ., தாசில்தார் அலுவலகங்களில் தமிழகம் முழுவதும் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை கத்தை, கத்தையாக பணம், ஆவணங்கள் சிக்கியது

சென்னை, 24 அக் 2024: தமிழ்நாடு முழுவதும் சார் பதிவாளர் அலுவலங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நடத்திய அதிரடி சோதனையில் கணக்கில் வராத பல லட்சம் பணம் பறிமுதல் செய்யப்பட்டன. இதேபோன்று வட்டார போக்குவரத்து அலுவலகங்கள், தாசில்தார் அலுவலகங்களிலும் சோதனை நடந்தது.

தீபாவளி பண்டிகை நெருங்கி விட்டாலே அரசு அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு திடீர் நடவடிக்கையில் இறங்குவது வழக்கம். பொதுமக்களிடம் இருந்து பணம் மற்றும் பொருட்களை வசூல் செய்வதை தடுக்கும் விதமாக இந்த நடவடிக்கையில் ஈடுபடுவார்கள்.

செங்குன்றம் பாலவாயில் அருகே உள்ள சார் பதிவாளர் அலுவலகத்தில் நேற்று மாலை 5 மணி அளவில் மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். ஆலந்தூர் உள்ள சார் பதிவாளர் அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸ் டி.எஸ்.பி., சர்மு தலைமையில் 8 பேர் கொண்ட குழு அதிரடி சோதனை செய்தனர். இந்த சோதனையில் பல முக்கிய ஆவணங்கள் சிக்கியதாக கூறப்படுகிறது. அதேபோல கிண்டியில் உள்ள மாநகராட்சி ஆலந்தூர் மண்டலத்திலும் லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் அதிரடி சோதனை செய்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கத்தில் உள்ள பத்திரப்பதிவு அலுவலகத்தில் செங்கல்பட்டு மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீஸ் சூப்பிரண்டு சரவணன் தலைமையில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். இதில் கணக்கில் வராத ரூ.3 லட்சம் கைப்பற்றப்பட்டது. திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆலந்தூர் லஞ்ச ஒழிப்பு பிரிவு இன்ஸ்பெக்டர்கள் மலர்கொடி, கிறிஸ்டி தலைமையில் 6 பேர் கொண்ட குழுவினர் சோதனை மேற்கொண்டனர்.

காஞ்சீபுரம் பொன்னேரி கரை பகுதியில் அமைந்துள்ள ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் 5 பேர் கொண்ட குழுவினர் திடீர் சோதனை மேற்கொண்டனர். அப்போது கணக்கில் வராத ரூ.60 ஆயிரம் கைப்பற்றப்பட்டது. ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம், அவல்பூந்துறை சார்பதிவாளர் அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் நடத்திய சோதனையில் ரூ.4 லட்சத்து 6 ஆயிரத்து 500 பறிமுதல் செய்யப்பட்டது.

திருச்சி ஸ்ரீரங்கத்தில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கணக்கில் வராத ரூ.69 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டது. பெரம்பலூர், அரியலூர் சார்பதிவாளர் அலுவலகங்களிலும் சோதனை நடைபெற்றது. திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் கணக்கில் வராத ரூ.1 லட்சம் பறிமுதல் செய்தனர். தேனி சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். கணக்கில் வராத ரூ.43 ஆயிரத்து 900 பறிமுதல் செய்யப்பட்டது.

நெல்லை மாவட்டம் ராதாபுரம் சார் பதிவாளர் அலுவலகம், தூத்துக்குடி யூனியன் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தி கணக்கில் வராத ரூ.1.64 லட்சத்தை கைப்பற்றினர். கொல்லங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது கணக்கில் வராத ரூ.33 ஆயிரம் சிக்கியது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நடத்திய சோதனையில் கணக்கில் வராத ரூ.1 லட்சமும், கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ரூ.2 லட்சமும் பறிமுதல் செய்யப்பட்டது. நீலகிரி மாவட்டம் கோத்தகிரி தாசில்தார் அலுவலகம், மயிலாடுதுறை பத்திரப்பதிவு அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் சோதனை நடத்தினர்.

கோவை அருகே உள்ள சோதனைச்சாவடி மற்றும் நகர ஊரமைப்பு அலுவலகம் ஆகிய 2 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் கணக்கில் வராத ரூ.5 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. காட்பாடியில் உள்ள போக்குவரத்து சோதனைச்சாவடி மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் வீட்டில் லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீர் சோதனை நடத்தினர். அப்போது கணக்கில் வராத ரூ.5வு லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. திருப்பூர் மாவட்டம் அவினாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் நடந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனையில் கணக்கில் வராத ரூ.1 லட்சத்து 84 ஆயிரம் கைப்பற்றப்பட்டது.

தர்மபுரி மாவட்டம் அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நேற்று திடீர் சோதனை நடத்தினார்கள். அப்போது கணக்கில் வராத ரூ.3 லட்சத்து 57 ஆயிரத்து 600 பறிமுதல் செய்யப்பட்டது. திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் நேற்று சோதனை நடத்தினர். அப்போது அங்கு கணக்கில் வராத ரூ.72 ஆயிரத்து 500-ஐ பறிமுதல் செய்தனர்.

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீஸ் சோதனையில் கணக்கில் வராத 98,900 ரூபாயை பறிமுதல் செய்தனர். திருவாரூர் மாவட்ட கருவூல அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீர் சோதனை நடத்தினர். தஞ்சையில் உள்ள நுகர்பொருள் வாணிப கழக சேமிப்பு கிடங்கில் லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீர் சோதனையின்போது கணக்கில் வராத ரூ.24 ஆயிரத்து 300 ரொக்கத்தை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகிறார்கள். சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தீயணைப்புத்துறை நிலையத்தில் நடத்திய லஞ்ச ஒழிப்பு சோதனையில் கணக்கில் வராத ரூ.1ரு லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் தாசில்தார் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. தாசில்தாராக கோமதி என்பவர் உள்ளார்.இந்த நிலையில், இந்த அலுவலகத்தில் அனுபோக சான்றிதழ், அடங்கல் உள்ளிட்ட பல சான்றிதழ்களை வழங்குவதற்காக அதிகாரிகள் லஞ்சம் பெறுவதாகவும், இதை சாதகமாக பயன்படுத்தி இடைத்தரகர்கள் பொதுமக்களிடம் இருந்து பணத்தை பெற்று அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து, அலுவலகம் நேரம் முடிந்த பிறகு இங்கு வந்து சான்றிதழ்களை பெற்று செல்வதாக நீலகிரி மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு புகார்கள் வந்தன.

இதையடுத்து நீலகிரி மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை துணை போலீஸ் சூப்பிரண்டு தலைமையில் இன்ஸ்பெக்டர் பரிமளா மற்றும் போலீசார் நேற்றிரவு கோத்தகிரி தாசில்தார் அலுவலகத்திற்கு வந்தனர். அப்போது அங்கிருந்த புரோக்கர் ஒருவர் தப்பியோட முயன்றார். உடனடியாக அவரை பிடித்த லஞ்ச ஒழிப்பு போலீசார், அலுவலகத்திற்குள் அழைத்து சென்றனர். பின்னர் தாசில்தார் அலுவலகத்தில் இருந்தவர்களை வெளியில் விடாமல், கதவை பூட்டி விட்டு, அலுவலகம் முழுவதும் அதிரடி சோதனை மேற்கொண்டனர்.

மேலும் கோத்தகிரி தாசில்தார் கோமதி, அலுவலக ஊழியர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் உள்பட அனைவரிடமும் தீவிர விசாரணை நடத்தினர். இரவு 7 மணிக்கு தொடங்கிய சோதனையானது விடிய விடிய நடந்தது. அதிகாலையிலேயே சோதனை முடிந்து போலீசார் திரும்பி சென்றுள்ளனர்.

இந்த சோதனையின்போது தாசில்தார் அலுவலகத்தில் இருந்து கணக்கில் வராத ரூ.10 ஆயிரத்து 200 பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்த சோதனையில் ஏராளமான ஆவணங்களையும் லஞ்ச ஒழிப்பு போலீசார் கைப்பற்றியதாக தெரிகிறது. மேலும் தாசில்தார், துணை தாசில்தார், 2 வி.ஏ.ஓ.க்கள் ஆகியோரின் வங்கி கணக்கில் பட்டா, சிட்டா உள்ளிட்ட சான்றிதழ் வாங்குவதற்காக ரூ.6 லட்சத்திற்கு மேல் லஞ்சமாக பணப் பரிவர்த்தனை நடைபெற்றுள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக லஞ்ச ஒழிப்பு போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.




# அரசு இடஒதுக்கீட்டின் கீழ் தேர்வான பழங்குடியின மாணவரிடம் பன்மடங்கு கட்டணம் கேட்கும் கல்லூரி?

சென்னை, 24 அக் 2024: நீலகிரி மாவட்டம் கோத்தகிரி பகுதியை சேர்ந்தவர் சஞ்சய். பழங்குடியின சமூகத்தை சேர்ந்த இவர், குஞ்சபனை அரசு பழங்குடியின உண்டு உறைவிட பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு முடித்துள்ளார். 12ம் வகுப்பில் 600க்கு 489 மதிப்பெண் பெற்றுள்ள இவர் அரசு இட ஒதுக்கீட்டின் கீழ் கோவை உள்ள தனியார் கல்லூரியில் பிசியோதெரபி படிக்க தேர்வாகி இருக்கிறார்.

இதன் பின்னர் கல்லூரிக்குச் சென்றபோது இரண்டு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் கட்டணமாக செலுத்தினால் மட்டுமே கல்லூரியில் சேர முடியும் என்று கல்லூரி நிர்வாகத்தினர் கூறியதாக தெரிகிறது. ஆனால் 30,000 ரூபாய் மட்டுமே கட்டணமாக அரசு நிர்ணயித்துள்ளது.

இதனால் அதிர்ச்சி அடைந்த மாணவ தனது தந்தையை அழைத்துக் கொண்டு நேற்று கோவை மாவட்ட ஆட்சியின் நேர்முக உதவியாளரிடம் (பொது) புகார் மனு அளித்துள்ளார். இதனை தொடர்ந்து இன்று மீண்டும் மாணவனை அழைத்து கல்லூரி நிர்வாகத்தினர் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு வருட படிப்பு போய்விட்டது: இது குறித்து மாணவன் சஞ்சய் கூறுகையில், "கல்லூரிக்கு சென்றவுடன் முதலில் 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் கேட்டார்கள். அவ்வளவு ரூபாய் கட்ட முடியாது என்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மனு அளித்தோம். பிறகு இன்று கல்லூரியிலிருந்து அழைத்து, 'ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும்.

அதில் 45 ஆயிரம் ரூபாய் உதவித்தொகைப் போக மீதம் உள்ள பணத்தை கட்ட வேண்டும்' எனக் கூறினர். அவ்வளவு பணத்தை தங்களால் கட்ட முடியாது. என்னை போன்று ஆன்லைன் கலந்தாய்வில் மூலமாகச் சென்ற அதிகமானோர் சிரமப்பட்டு வருகிறார்கள். மருத்துவ படிப்புகள் உள்ளிட்ட அவர்களுக்கு தருவது போல் 7.5% இட ஒதுக்கீடு பாராமெடிக்கல் படிப்பிற்கும் தந்தால் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும். தற்போது எனக்கு ஒரு வருட படிப்பு போய்விட்டது. எனவே அடுத்த வருடம் தான் படிப்பில் சேர வேண்டும் இதற்கான உரிய நடவடிக்கையை தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டும்" என தெரிவித்தார்.




அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்: இது குறித்து பேசிய மாணவனின் தந்தை ராஜு கூறுகையில், "என் மகனுக்கு வந்த நிலமை வேறு எந்த குழந்தைகளுக்கும் வரக்கூடாது. அரசு நடவடிக்கை எடுத்து மருத்துவ கல்லூரியில், ஆதிவாசி மக்களான எங்களுக்கு நல்ல ஒரு வாய்ப்பு ஏற்படுத்தி தந்து மேற்படிப்பு தொடர்வதற்கு வழி வகுக்க வேண்டும். என் மகன் அரசு இட ஒதுக்கீட்டில் தேர்வாகி வந்துள்ளான். சுயநிதி மூலம் வரவில்லை எனவே அரசு நிர்ணயித்த தொகையை விட அதிகமாக கேட்பதால், அந்த கல்லூரியில் என் மகனை படிக்க வைக்க முடியாத சூழல் உள்ளது" என தெரிவித்தார்.



நிர்வாகத்தினர் பதில்: இதுகுறித்து சம்பந்தபட்ட தனியார் கல்லூரியில் பிசியோதெரபி பிரிவு முதல்வர் கார்த்திகேயனை தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் கூறியதாவது,"மாணவர் சஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் அளித்திருந்த நிலையில் மாணவரை அழைத்து அவருக்கு தேவையான சலுகைகள் கிடைப்பது குறித்து நிர்வாகத்திடம் பேசப்பட்டுள்ளதாக" தெரிவித்தார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வியாழன், அக்டோபர் 24, 2024

# கனமழை காரணமாக தரையிறங்க முடியாமல் தவித்த விமானங்கள்: மதுரையில் பரபரப்பு







சென்னை, 24 அக் 2024: மதுரையில் பெய்த கனமழை மற்றும் அதிக காற்றழுத்தத்தின் காரணமாக சென்னை மற்றும் பெங்களூருவிலிருந்து வந்த இண்டிகோ பயணிகள் விமானங்கள் தரையிறங்க முடியாமல் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக வானில் வட்டமடித்ததால் மதுரை விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு நிலவியது.

மதுரையில் நேற்று முன்தினம் நள்ளிரவு 2 மணி நேரத்திற்கும் மேலாகப் பெய்த கனமழை, நகரின் பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தியது. மேலும் செல்லூர் கண்மாயிலிருந்து வெளியேறிய தண்ணீர் பந்தல்குடி கால்வாயில் பெருகியதால், செல்லூர் பகுதியிலுள்ள பல்வேறு தெருக்கள் தண்ணீரில் மிதந்தன. சில வீடுகளுக்குள்ளும் தண்ணீர் புகுந்தது.

இந்த நிலையில், இன்று இரவு 8 மணியளவில் மதுரையின் பல்வேறு பகுதிகளில் பலத்த காற்று மற்றும் இடியுடன் கூடிய கனமழை பெய்தது. மதுரை விமான நிலையம் அமைந்துள்ள அவனியாபுரம், பெருங்குடி பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக பெங்களூருவிலிருந்தும், சென்னையிலிருந்தும் மதுரைக்குப் புறப்பட்டு வந்த இண்டிகோ விமானங்கள் மதுரை விமான நிலையத்தில் தரையிறங்க முடியாமல் தவித்தன.

சென்னையிலிருந்து இரவு 7:20 மணிக்குப் புறப்பட்ட மதுரை விமானம், 8:20க்கு மதுரையில் தரையிறங்க வேண்டும். அதேபோன்று பெங்களூருவிலிருந்து இரவு 7:40 மணிக்குப் புறப்பட்ட விமானம், மதுரையில் இரவு 8:35க்கு தரையிறங்க வேண்டும். ஆனால் பலத்த மழை மற்றும் காற்றழுத்தம் காரணமாக விமானஙஅகள் தரையிறங்க முடியாமல் தேனி, உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி வான் பகுதியில் வட்டமடிக்கத் தொடங்கின.

தகவலறிந்த விமான கட்டுப்பாட்டு மைய (ஏடிசி) அதிகாரிகள், தொடர்ந்து இவ்விரு விமானங்களின் நிலை குறித்து தகவல் கேட்டறிந்ததுடன், தகுந்த வழிகாட்டுதல்களை அந்தந்த விமானங்களின் விமானிகளுக்கு அளித்து வந்தனர். இதனையடுத்து ஒரு மணி நேரத்திற்குப் பிறகு இரவு சுமார் 9: 50 மணியளவில் விமான நிலையப் பகுதியில் வானிலை சீரடைந்ததும், 2 விமானங்களும் பத்திரமாக தரையிறக்கப்பட்டன.

# சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார் அமைச்சர் துரைமுருகன்!



சென்னை, 24 அக் 2024: வேலூரில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இன்று காட்பாடி இருந்து ரயில் மூலம் சென்னை செல்ல இருந்தார். இதற்காக காட்பாடி ரயில் வந்த போது அவருக்கு திடீரென தலைவலி மற்றும் தலைச்சுற்றல் இருப்பதாக அருகில் உள்ள நிர்வாகிகளிடம் கூறியுள்ளார்.

இதன் பின்னர் உடனடியாக வேலூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அமைச்சர் துரைமுருகன் அனுமதிக்கப்பட்டர். அங்கு அவருக்கு முழுமையாக உடல் பரிசோதனை செய்யப்பட்டது. மருத்துவ பரிசோதனைக்குப் பிறகு அமைச்சர் துரைமுருகன் இப்போது நலமுடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து அவர் வீடு திரும்பினார். தற்போது அமைச்சர்கள் மற்றும் திமுக மாவட்ட, மாநில நிர்வாகிகள் அமைச்சர் துரைமுருகனை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு நலம் விசாரித்து வருவதாக அவரது நெருங்கிய வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளனர். வயது மூப்பு காரணமாக அவ்வபோது உடல் நல பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகிறார் அமைச்சர் துரைமுருகன், அடிக்கடி மருத்துவ பரிசோதனை செய்து கொள்வதையும் வழக்கமாக வைத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மகளிர் சிறைகளில் பெண் அதிகாரிகளை நியமிக்கக் கோரிய வழக்கு; தமிழக அரசுக்கு கோர்ட் நோட்டீஸ்!

சென்னை, 24 அக் 2024: வேலூர், கோவை, சேலம் மற்றும் மதுரையில் மகளிர் சிறப்பு சிறைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த சிறைகளுக்கு பெண் கண்காணிப்பாளர்களையே நியமிக்க உத்தரவிடக் கோரி, வழக்கறிஞர் புகழேந்தி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், மகளிர் சிறைகளின் கண்காணிப்பாளர்களாக ஆண் அதிகாரிகள் நியமிக்கப்படுவதால், பெண் கைதிகளால் தங்களது குறைகளை சொல்ல முடியாத நிலை இருப்பதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம், நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, மகளிர் சிறைகளில் உள்ள காலிப் பணியிடங்கள் எப்போது நிரப்பப்படும் என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அரசு ப்ளீடர் எட்வின் பிராபகர், வேலூர் மகளிர் சிறையில் மட்டுமே ஆண் அதிகாரி இருப்பதாகவும், மற்ற சிறைகளில் பெண் கண்கானிப்பாளர்கள் பணியில் இருப்பதாகவும், வேலூர் சிறைக்கும் விரைவில் பெண் அதிகாரி நியமிக்கப்படுவார் என தெரிவித்தார்.

இதையடுத்து, மனுவுக்கு பதிலளிக்கும்படி, தமிழக அரசுக்கும், சிறைத்துறை டிஜிபி-க்கும் உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை நவம்பர் 14ம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.

# ஆளுநருக்கு பாடம் எடுத்த அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி!

சென்னை, 24 அக் 2024: தமிழக ஆளுநர் ஆர்.என் ரவி திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அருகே உள்ள தனியார் பள்ளிக்கு சென்றார். அங்கு அவர் மாணவ-மாணவிகள் மத்தியில் உரையாற்றினார். அப்போது "இனிவரும் காலங்களில் படிக்கும் மேஜையில் கடவுள் சரஸ்வதியின் புகைப்படத்தை வைத்து வணங்கி விட்டு, படித்தால் நிச்சயம் அறிவு பெருகும்" என்று அறிவுறுத்தினார்.

இப்பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தி உள்ள நிலையில் பலரும் தங்களது கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர். இந்தநிலையில் ஆளுநர் பேசியதை குறிப்பிட்டு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தனது எக்ஸ் பதிவில் தெரிவித்து இருப்பதாவது,"அண்ணல் அம்பேத்கர் அவர்கள் ஒவ்வொரு குடிமகனின் அடிப்படைக் கடமை என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 51A(h) HKM™ "It shall be the duty of every citizen of India to develop scientific temper, humanism and the spirit of inquiry and reform" என வரையறுத்துள்ளார்.

அறிவியல் சார்ந்த சிந்தனைகளை மாணவர்களிடம் வளர்ப்பதுதான் நமது கடமையாக இருக்க வேண்டும்" என அரசியலமைப்புச் சட்டம் சொல்லும் இந்திய குடிமகனின் கடமையை எக்ஸ் பதிவில் எடுத்துரைத்துள்ளார். ஏற்கனவே ஆளுநர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்" என்ற வரியை விட்டு பாடப்பட்டது சர்ச்சைக்குயானது.

இதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட பலரும் தங்களது கண்டனங்களைத் தெரிவித்து இருந்தநிலையில், தற்போது பள்ளி மாணவ- மாணவிகள் மத்தியில் உரையாற்றியது பேசுபொருளாகியுள்ளது.

# 76 வயதில் தடகளம் போட்டியில் 3 பதக்கம் வீட்டிற்கே சென்று பாராட்டிய விசிக நிர்வாகிகள்!





சென்னை, 24 அக் 2024: திருவள்ளுவர் அடுத்த கைவண்டூர் கிராமத்தை சேர்ந்தவர் மூத்தோர் தடகள வீரரான ஓவியர் சாமுவேல் (75). இவர் சிறு வயது முதலே பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் அதிக ஆர்வம் கொண்டவர். இதன் காரணமாக 200க்கும் மேற்பட்ட பதக்கங்களை வென்றுள்ளார்.

இந்தநிலையில் இந்த மாதம் 12, 13 ஆகிய 2 நாள்கள் மலேசியாவின் தலைநகரான கோலலாம்பூரில் அமைந்துள்ள புக்கிட் ஜெல்லி ஸ்டேடியத்தில், ஆசிய அளவிலான 75+ பிரிவில் மூத்தோர் தடகள சாம்பியன் ஷிப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் 30 நாடுகளில் இருந்து மூத்தோர் தடகள வீரர்கள் இதில் பங்கு பெற்றனர்.

இதில் தமிழகத்தின் சார்பாக திருவள்ளூர் மாவட்டத்தில் இருந்து 10 மூத்தோர் தடகள வீரர்கள் இப்போட்டியில் கலந்துகொண்டனர்.அதில் திருவள்ளூர் அடுத்த கைவண்டூர் கிராமத்தை சேர்ந்த ஓவியர் சாமுவேல் 75+ வயதுடைய பிரிவில் நீளம்/உயரம் தாண்டுதல் போட்டியில் பங்கு பெற்றனர்.

இதில் உயரம் தாண்டுதலில் 1.15 மீட்டர்ஸ் தாண்டி தங்க பதக்கமும், நீளம் தாண்டுதலில் 3.65 மீட்டர்ஸ் தாண்டி வெள்ளி பதக்கம் வென்றார். மேலும் மும்முறை தாண்டுதல் போட்டியில் கலந்து கொண்டு 7.63 மீட்டர்ஸ் தாண்டி முதலாவது இடம் பிடித்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

இதன் மூலம் 2 தங்கம் 1 வெள்ளி வென்று அசத்தியுள்ளார் இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்து உள்ளார் 75 வயதான சாமுவேல். இவரை கௌரவிக்கும் விதமாக மணவாள நகர் பகுதியில் அமைந்துள்ள புத்தர் உடற்பயிற்சி கூடத்தின் நிறுவனர் சீனிவாசன் தலைமையில் திருவள்ளூர் மாவட்ட வீரர்கள், தேசிய பளுதூக்கும் வீரர் ஆனந்தன், மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகிகளான வழக்கறிஞர் உள்ளிட்டோர் தடகள வீரர் சாமுவேலுக்கு பொன்னாடை போர்த்தி

சந்தன மாலை அணிவித்தும் பாராட்டுக்களை தெரிவித்தனர். இது குறித்து செய்தியாளர்களை சந்தித்த தடகள வீரர் சாமுவேல் கூறுகையில், "தேசிய அளவில் தங்கம், வெள்ளி, போன்ற பதக்கங்களை வென்று தாயகம் திரும்பவும் எங்களுக்கு மாவட்ட நிர்வாக அளவில் கூட மரியாதை கிடைப்பதில்லை. இளம் வீரர்கள், மற்றும் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று தாயகம் திரும்பினார் அவர்களை அரசு சார்பில் கௌரவித்து ஊக்கதொகை வழங்கப்படுகிறது.

ஆனால் மூத்தோர் வீரர்கள் வெளிநாட்டிற்குச் சென்று வெற்றி பெற்று இந்தியாவுக்கு பெருமை சேர்க்கின்றோம் ஆனால் எங்களுக்கு உதவி செய்வதுமில்லை பாராட்டு தெரிவிக்கவும் யாரும் இல்லை. எனவே வருகின்ற காலங்களில் தமிழக அரசு எங்களைப் போன்ற மூத்தோர் வீரருக்கு உதவிகள் செய்ய வேண்டும்" என தெரிவித்தார்.

# தீபாவளியையொட்டி ஞாயிற்றுக்கிழமை ரேஷன் கடைகள் செயல்படும்: அமைச்சர் பெரியகருப்பன் தகவல்

சென்னை, 24 அக் 2024: முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அனைத்து ரேஷன் கடைகளும் வரும் ஞாயிற்றுக்கிழமை செயல்படும் என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுரையின்படி பொதுமக்கள் அனைவரும் தீபாவளிப் பண்டிகையை சிறப்பாக கொண்டாடும் வகையில் தமிழ்நாட்டில் அனைத்து துறைகளின் சார்பில் பல்வேறு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, கூட்டுறவுத்துறையின் மூலம் தமிழ்நாடு முழுவதும் செயல்படும் 24,610 முழு நேர ரேஷன் கடைகள், 10,164 பகுதி நேர ரேஷன் கடைகள் என மொத்தம் 34,774 ரேஷன் கடைகளில் பொருட்களைப் பெற்று தீபாவளி பண்டிகையை பொதுமக்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் அனைத்து முழுநேர மற்றும் பகுதி நேர ரேஷன் கடைகளும் வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று முழுவதுமாக செயல்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவையில் கல்லூரி மாணவர்கள் மோதல் : 3 பேருக்கு கத்திக்குத்து

சென்னை, 24 அக் 2024: கோவையில் கல்லூரி மாணவர்களுக்கிடையே நடந்த மோதலில் 3 பேருக்கு கத்திக்குத்து விழுந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேனி மாவட்டம், பங்களா மேடு, பழைய டி.வி.எஸ். ரோடு பகுதியைச் சேர்ந்தவர் செந்தில்குமார். இவரது மகன் ராகுல் (வயது 18). இவர் நவ இந்தியா பகுதியில் உள்ள தனியார் கல்லூரியில் பி.காம். 2-ம் ஆண்டு படித்து வருகிறார். இதற்காக கோவை சவுரி பாளையம் ரோட்டில் அண்ணா நகர் பகுதியில் நண்பர்களுடன் அறை எடுத்து தங்கி வருகிறார்.

இந்த நிலையில் ராகுலுக்கும், அதே கல்லூரியில் பி.பி.ஏ.முதலாம் ஆண்டு படிக்கும் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர் ராகுல்காந்தி என்பவருக்கும் சீனியர் - ஜூனியர் பிரச்சனை தொடர்பாக மோதல் இருந்து வந்தது. இந்த நிலையில் கல்லூரியில் கடந்த 19-ந் தேதி தனியார் டி.வி. நிகழ்ச்சி அங்கு உள்ள ஆடிட்டோரியத்தில் நடந்தது. அப்போது மீண்டும் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்படடது. சக மாணவர்கள் அவர்களை சமாதானப்படுத்தினர். நேற்று முன்தினம் ராகுல் அங்கு உள்ள டீக்கடை அருகில் நின்ற போது மீண்டும் ராகுல்காந்தி மற்றும் அவரது நண்பர்கள் அவரிடம் தகராறு செய்தனர். அப்போது ராகுலுடன் தங்கி படிக்கும் மாணவர் கதிர் என்பவர் மோட்டார் சைக்கிளில் அங்கு வந்தார். அப்போது ராகுல் காந்தியின் நண்பர்கள் அவரது மோட்டார் சைக்கிளை பறித்துக் கொண்டு சென்றனர். அந்த மோட்டார் சைக்கிளில் ஜிபிஎஸ் கருவி வசதி இருந்ததால் அதன் மூலம் மோட்டார் சைக்கிள் ராமநாதபுரம் ஒலம்பஸ், பாரதி நகரில் இருப்பதை கண்டு பிடித்து நேற்று மாலை கதிர் மற்றும் நண்பர்கள் மீண்டும் எடுத்துக் கொண்டு திரும்பி வந்தனர்.

நேற்று மாலை ராகுல் காந்தி, தனது நண்பர்கள் சிலருடன் ராகுல் தங்கியிருந்த அறைக்கு சென்றனர். அங்கிருந்த ராகுல் மற்றும் கதிர் அவரது நண்பர்களை அடித்து உதைத்து கத்தியால் குத்தினர். இதில் ராகுல் மற்றும் அவரது நண்பர்கள் தினேஷ் பாண்டியன், ரோஷன் ராஜா ஆகியோருக்கு தலை, கை, மார்பு, கழுத்து பகுதிகளில் கத்திக்குத்து விழுந்தது. அதோடு நிற்காமல் ராகுல் காந்தி மற்றும் அவரது நண்பர்கள் அவர்கள் தங்கியிருந்த அறையையும் அடித்து நொறுக்கினர். அதன் பிறகு அவர்கள் வந்த மோட்டார் சைக்கிளில் அங்கிருந்து தப்பி சென்றனர். இதை பார்த்த மற்ற மாணவர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்தனர். காயம் அடைந்த மாண வர்கள் மீட்கப்பட்டு கோவை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இது குறித்து பாதிக்கப்பட்ட மாணவர் ராகுல் ராமநாதபுரம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். போலீசார் சம்பவம் தொடர்பாக முதலாம் ஆண்டு மாணவர் ராகுல்காந்தி, கெவின் சதீஷ் மற்றும் 5 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# உலகின் 2வது நீளமான மெரினா கடற்கரை பெறப்போகும் நீலக்கொடி சான்றிதழ்!



சென்னை, 24 அக் 2024: மிக நீளமான கடற்கரையில் உலகின் இரண்டாவது இடமும், இந்தியாவின் முதலிடமும் பிடித்திருப்பது சென்னை மெரினா கடற்கரை. இத்தகைய சிறப்பு வாய்ந்த மெரினா கடற்கரைக்கு கூடுதல் அங்கீகாரமாக நீலக்கொடி (நிறீஜூமீ யீறீணீரீ) சான்றிதழ் கிடைக்கப் போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக உலகத்தரம் வாய்ந்த வசதிகளை சென்னை மெரினா கடற்கரையில் ஏற்படுத்தப்பட உள்ளது. இந்த நிலையில், நீலக்கொடி சான்றிதழ் என்றால் என்ன? யார் அந்த சான்றிதழ்களை வழங்குவார்கள்? ஏன் சென்னை மெரினா கடற்கரைக்கு நீலக்கொடி சான்றிதழ் கொடுக்கப்படுகிறது? அதனால் என்ன பயன்? என்பது குறித்து இந்த செய்தி தொகுப்பில் காணலாம்.

நீலக்கொடி சான்றிதழ்: சுற்றுச்சூழல் மேலாண்மை, சுத்தமான மணல், சுற்றுலா பயணிகளுக்கான வசதிகள், குளிக்க தகுந்த சுகாதாரமான நீர், பாதுகாப்பு உள்ளிட்ட 33 அம்சங்களை மையமாக வைத்து நீலக்கொடி சான்றிதழ் வழங்கப்படுகிறது. இந்த சான்றிதழ் பெறப்பட்டிருக்கும் கடற்கரை பாதுகாப்பான சுகாதாரமான கடற்கரை என்ற அர்த்தத்தை கொண்டிருப்பதாகவும் இருக்க வேண்டும்.

நீலக்கொடி அந்தஸ்து: சுற்றுச்சூழலை பேணிக்காக்கும் வகையில் அழகிய கடற்கரையாக இருக்கும் கடற்கரையை ஆய்வு செய்து டென்மார்க்கைச் சேர்ந்த சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளை நிறுவனம் சார்பில் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இந்த நீலக்கொடி அந்தஸ்து பெறும் கடற்கரைக்கு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வருவதால் பெரும்பான்மையான நாடுகள் நீலக்கொடி சான்றிதழை பெற முயற்சி செய்து வருகின்றனர்.

இந்தியாவில் நீலக்கொடி: உலகளவில் இதுவரை 4154 கடற்கரைகள் நீலக்கொடி சான்றிதழ் பெற்றுள்ளது. இந்தியாவில் இது முதன்முறை அல்ல, சென்னை மெரினா கடற்கரையை தவிர்த்து இதற்கு முன் ஒடிசாவில் உள்ள கோல்டன் கடற்கரை, குஜராத்தில் உள்ள சிவராஜ்பூர் கடற்கரை, கேரளாவில் உள்ள கப்பாட் கடற்கரை, டையுவில் உள்ள கோக்லா கடற்கரை, அந்தமானில் உள்ள ராதா நகர் கடற்கரை, கர்நாடகாவில் உள்ள காசர் கோடு, படுபித்ரி கடற்கரை, ஆந்திராவில் உள்ள ருசி கொண்டா கடற்கரை, தமிழ்நாட்டில் உள்ள கோவளம் கடற்கரை, புதுச்சேரியில் உள்ள ஈடன் கடற்கரை ஆகிய 10 கடற்கரைகள் நீலக்கொடி சான்றிதழை பெற்றுள்ளது.

நீலக்கொடி பட்டியலில் இடம்பெற தயாராகும் மெரினா: நீலக்கொடி சான்றிழதயை பெற நடைபெறும் கட்டமைப்பு பணிகளுக்காக சென்னை மாநகராட்சி சார்பில் 5.62 கோடி ரூபாய்க்கு டெண்டரும் கோரப்பட்டிருக்கிறது. டெண்டர் நவம்பர் 15 ஆம் தேதி முடிவடைகிறது. டெண்டரில் தேர்வாகும் நிறுவனம் நவம்பர் 15ஆம் தேதிக்கு பிறகு கட்டமைப்பு பணிகளை தொடங்கி விரைவில் முடித்து நீலக்கொடி சான்றிதழை பெறும் முயற்சியில் சென்னை மாநகராட்சி இறங்கியுள்ளது.

உலகத்தரம் வாய்ந்த வசதிகள்: நீலக்கொடி சான்றிதழ் பெற சென்னை மெரினா கடற்கரையில் எல்இடி விளக்குகள், சோலார் பவர் பிளான்ட், சிசிடிவி கேமராக்கள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனி தனியே கழிவறைகள் மற்றும் உடை மாற்றும் அறைகள், நடைபாதை, மிதிவண்டி வழித்தடங்கள், விளையாட்டுப் பகுதிகள், படகு துறை, கண்காணிப்பு கோபுரம் இவற்றுடன் பாரம்பரிய தாவரங்கள் வகைகள் இருக்கக்கூடிய ஆய்வு கூடம் உள்ளிட்ட கட்டமைப்புகள் செயல்படுத்தப்பட உள்ளனர். மேலும், ரூ.1,275 கோடியில் தமிழ்நாடு கடற்கரை மறுசீரமைப்பு இயக்கத்தின் சார்பில் உலக வங்கி கடன் உதவி மூலம் கடலோர மேம்பட்ட திட்டங்களை தமிழ்நாடு அரசு அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

ஒரே மாதத்தில் முடிவடையும் கட்டமைப்பு பணி: மெரினா கடற்கரைக்கு நீலக்கொடி சான்றிதழ் பெற மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ் குமார் ஈடிவி பாரத் செய்தி ஊடகத்திடம் பேசுகையில், "சென்னை மெரினா கடற்கரைக்கு நீலக்கொடி கடற்கரை சான்றிதழை பெறுவதற்காகவும், கட்டமைப்பு பணிகளை துவங்குவதற்காகவும் சென்னை மாநகராட்சி டெண்டர் விடப்பட்டுள்ளது.

டெண்டர் பெறும் நிறுவனம் ஒரு மாதத்திற்குள் நீலக்கொடி சான்றிதழ் பெறுவதற்கான கட்டமைப்பு பணிகளை முடித்துக் கொடுக்க உள்ளனர். அதன் பின்னர், விண்ணப்பம் செய்து டென்மார்க் சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளை குழுவினர் சென்னை மெரினா கடற்கரை முழுவதும் பார்வையிட்டு ஆய்வு செய்து சென்னை மெரினா கடற்கரைக்கு நீலக்கொடி அந்தஸ்து வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது" என்று மகேஷ் குமார் தெரிவித்தார்.

# பொள்ளாச்சியிலிருந்து கோவை சென்ற அரசு பேருந்து தீப்பிடித்து எரிந்து சேதம்



சென்னை, 24 அக் 2024: பொள்ளாச்சியில் இருந்து கோவைக்கு பயணிகளுடன் சென்ற அரசு பேருந்து ஒத்தக்கால் மண்டபம் அருகே திடீரென தீப்பிடித்து எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் இருந்து கோவை நோக்கி அரசுப்பேருந்து ஒன்று வந்து கொண்டிருந்தது. பேருந்தை ஓட்டுநர் பொள்ளாச்சியை சேர்ந்த சுரேஷ் என்பவர் ஓட்டி வந்தார். நடத்துநராக பொள்ளாச்சியை சேர்ந்த கதிரேசன் என்பவர் பணியில் இருந்தார். இப்பேருந்தில் 40-க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர்.

இப்பேருந்து காலை 8 மணியளவில் மயிலேறிபாளையத்தை கடந்து ஒத்தக்கால் மண்டபம் பாலம் நோக்கி வந்த போது பேருந்தின் இன்ஜின் பகுதியில் இருந்து புகை வந்தது. அதை பார்த்த ஓட்டுநர் அதிர்ச்சியடைந்து பேருந்தை ஓரமாக நிறுத்தினார். அதைத் தொடர்ந்து பேருந்தில் இருந்த பயணிகள் அனைவரும் கீழே இறங்கினர். அடுத்த சில நிமிடங்களில் பேருந்தில் தீப்பிடித்தது. சாலையில் பேருந்து கொளுந்து விட்டு எரிந்தது.

இதுகுறித்து தகவல் அறிந்த தீயணைப்புத்துறையினர் மற்றும் செட்டிபாளையம் போலீசார் சம்பவ இடத்துக்குச் சென்று பேருந்தில் பிடித்த தீயை அணைக்க முயன்றனர். சில மணி நேரம் போராடி பேருந்தில் பிடித்த தீ அணைக்கப்பட்டது. இதில் பேருந்து முற்றிலும் எரிந்து சேதமடைந்தது.

இச்சம்பவம் தொடர்பாக செட்டிபாளையம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பெங்களூரு கட்டிட விபத்து: உயிரிழந்த தமிழர்களின் குடும்பத்திற்கு அரசு நிதியுதவி அறிவிப்பு!



சென்னை, 24 அக் 2024: கர்நாடக மாநிலம் பெங்களூரு நகரில் கடந்த இரண்டு நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் யெலகங்கா, மல்லேஸ்வர், சில்க் சாலை உள்ளிட்ட பகுதிகளில் சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. பல்வேறு குடியிருப்பு பகுதிகளை மழை நீர் சூழ்ந்துள்ளது.

கனமழையில் இடிந்த கட்டடம்: இந்நிலையில் கடந்த 22.10.2024 அன்று பெங்களூரு, ஹென்னூரில் பிற்பகலில் பெய்த கனமழையின் காரணமாக பாபுசாபாலி பகுதியில் கட்டுமானப்பணி நடந்துகொண்டிருந்த கட்டடம் எதிர்பாராதவிதமாக இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானது. அந்த இடிபாடுகளில் சம்பவ இடத்திலேயே ஒருவர் பலியான நிலையில் பத்து பேர் படுகாயத்துடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதில் சிகிச்சை பலனின்றி மேலும் 7 பேர் உயிரிழந்தனர். இவ்விபத்தில் தமிழ்நாட்டிலிருந்து கட்டுமானப் பணிக்காக சென்றிருந்த கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மணிகண்டன் மற்றும் சத்தியராஜ் ஆகிய இருவரும் உயிரிழந்தனர்.

முதலமைச்சர் இரங்கல்: இந்நிலையில் இந்த விபத்தில் உயிரிழந்த மணிகண்டன் மற்றும் சத்தியராஜ் ஆகியோரின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் மு.க.ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துள்ளார். மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க கோரி உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்தார்.

# சென்னை தலைமைச் செயலகத்தில் ‘டைல்ஸ்’ விரிசல்: ஊழியர்கள் ஓட்டம் கட்டிடம் உறுதியுடன் உள்ளது: அமைச்சர் வேலு விளக்கம்



சென்னை, 24 அக் 2024: சென்னை தலைமைச் செயலகத்தில் தரையில் விரிசல் ஏற்பட்டது. இதனால் பணியாளர்கள் அலறி அடித்துக் கொண்டு கட்டிடத்தை விட்டு வெளியேறியதால் பரபரப்பு ஏற்பட்டது. இது தொடர்பாக அமைச்சர் எ.வ.வேலு விளக்கம் அளித்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் பல்வேறு துறை அரசு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் மொத்தம் 9 தளங்கள் உள்ளது. இன்று காலை பணியாளர்கள் வழக்கமான பணியில் ஈடுபட்டு வந்தனர். காலை 11.30 மணியளவில் திடீரென முதல் தளத்தில் தரையில் உள்ள டைல்ஸ்களுக்கு இடையே விரிசல் ஏற்பட்டு அதிர்வு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் அச்சமடைந்த பணியாளர்கள் உடனடியாக அலறி அடித்துக் கொண்டு அந்த கட்டிடத்தை விட்டு வெளியேறினர்.

இதன் பின்னர் தகவலறிந்த காவல்துறை சம்பவ இடத்திற்கு வந்தனர். இது காற்று வெடிப்பினால் ஏற்பட்ட சாதாரண விரிசல் தான், பயப்படத் தேவையில்லை என்று காவல்துறையினர் கூறியுள்ளனர். பொதுப்பணித் துறை இதனை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. எனவே, ஊழியர்கள் தங்கள் பணியைத் தொடருமாறு காவல்துறையினர் அறிவுறுத்தினர். எனினும் அச்சம் காரணமாக ஊழியர்கள் பணிக்குத் திரும்பாமல் இருந்தனர். அமைச்சர் எ.வ.வேலு சம்பவ இடத்திற்கு வந்து பணியாளர்களுக்கு விளக்கம் கொடுத்தார். அதைத் தொடர்ந்து பணியாளர்கள் தங்கள் இருக்கைகளுக்கு திரும்பி சென்று பணியில் ஈடுபட்டனர்.

அப்போது அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களைச் சந்தித்து கூறியதாவது:

“நாமக்கல் கவிஞர் மாளிகை என்பது, 1974-ல் கட்டப்பட்டு திறக்கப்பட்ட ஒரு மாளிகை. இங்குதான், தலைமைச் செயலகத்தின் முழு அலுவலகமும் இருக்கிறது. இதன் முதல் தளத்தில், வேளாண்மைத்துறை செயல்பட்டு வருகிறது. இந்த தளத்தில் திடீரென விரிசல் ஏற்பட்டது என்றொரு பீதி ஏற்பட்டதால், அலுவலகத்தில் பணியில் இருந்த அனைவரும் வெளியே வந்துவிட்டனர்.

இந்த செய்தி கிடைத்தவுடனே, இங்கு வந்து பொதுப்பணித்துறை பொறியாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். கட்டிடத்தின் உறுதித்தன்மை எந்த காரணத்தாலும், உருகுலையவில்லை. அது உறுதியாகவே இருக்கிறது. தரைத்தளத்தில் 14 ஆண்டுகளுக்கு முன்பாக டைல்ஸ் பதிக்கப்பட்டது. அப்போதெல்லாம் 2க்கு 2, 2க்கு 4 என்ற அளவில் டைல்ஸ்கள் தயாரிக்கப்படாத காலம். 1க்கு1 என்ற அளவில் டைல்ஸ்கள் தயாரிக்கப்பட்டிருந்த காலம். எனவே, இதெல்லாம் அந்த காலகட்டத்தில் பதிக்கப்பட்ட டைல்ஸ்கள்.

இவ்வகை டைல்ஸ்களில், நாளடைவில் தானாக ஏர் கிராக் விழும். இந்த ஏர் கிராக்கைப் பார்த்துதான், கட்டிடத்தில் விரிசல் ஏற்பட்டுவிட்டதோ என்ற அச்சத்தில் பணியாளர்கள் வெளியேறிவிட்டனர். சம்பந்தப்பட்ட பொதுப்பணித்துறையின் தலைமைப் பொறியாளர், நிர்வாகப் பொறியாளர், மேற்பொறியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் சோதனை செய்தனர். இந்த கட்டிடம் உறுதித்தன்மையோடு இருக்கிறது.

இன்று அல்லது நாளைக்குள், ஏர் கிராக் விழுந்த டைல்ஸ்களை நீக்கிவிட்டு, புதுவகையான டைல்ஸ்களைப் பதிக்க உத்தரவிட்டுள்ளேன். பணியாளர்கள் அச்சப்படத் தேவையில்லை. இக்கட்டிடம் உறுதித்தன்மையுடன் இருக்கிறது. பணியாளர்கள் திரும்பவும் தங்களுடைய பணிக்குத் திரும்பிவிட்டனர்.

முன்பெல்லாம் டைல்ஸ் பதிக்கும்போது சிமெண்டும், மணலும் கலந்து மட்டும் பதித்துவிடுவார்கள். அந்த கலவை நாளடைவில் சுருங்குவதால் தான் இதுபோன்ற ஏர் கிராக்குகள் விழுகின்றன. தற்போது நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ரசாயனங்கள் சேர்த்து டைல்ஸ்கள் பதிக்கப்படுகிறது என்றார்.

# 5 மெகாவாட் தன்னக பசுமை மின்சக்தி பயன்பாடு தொடங்குவதை பெருமையுடன் அறிவிக்கும் ஹை-டெக் பைப்ஸ் லிமிடெட்

சென்னை, 24 அக் 2024: இந்தியாவில் ஸ்டீல் டியூப்கள் மற்றும் பைப்கள் தயாரிப்பில் முன்னணி நிறுவனமாக திகழும் ஹை-டெக் பைப்ஸ் லிமிடெட் அதன் வளாக மேற்கூரை சோலார் மின்சக்தி உற்பத்தி மையம் மற்றும் திறந்த அணுகல் ஒப்பந்தங்கள் வழியாக பெறப்படும் 5 மெகாவாட் தன்னக (கேப்டிவ்) பசுமை மின்சக்தி பயன்படுத்தப்படுவது தொடங்கப்பட்டிருப்பதை அறிவித்திருக்கிறது. இந்த உத்தி வாய்ந்த நடவடிக்கை, நிலைப்புத்தன்மை மீது இந்நிறுவனத்தின் பொறுப்புறுதியை மேம்படுத்துவதுடன் சுற்றுச்சூழல் ரீதியில் பொறுப்புள்ள உற்பத்தி செயல்பாட்டில் அதன் தலைமைத்துவத்தையும் வலுப்படுத்துகிறது. சனாந்த் யூனிட் மிமி பேஸ் 1 ல் புதிதாக நிறுவப்பட்டுள்ள 1 மெகாவாட் மேற்கூரை சோலார் மின்சக்தி நிலையத்தின் ஆதரவோடும் மற்றும் குழும தன்னக திறந்தநிலை அணுகல் சோலார் செயல்திட்டத்திலிருந்து பெறப்படுகிற 3 மெகாவாட் மின்சக்தி ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த முன்னெடுப்பானது, நேரடியாக தொழிலக வளாகத்திலேயே புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை உற்பத்தி செய்யவும் மற்றும் பயன்படுத்தவும் இந்நிறுவனத்தை ஏதுவாக்கியிருக்கிறது. இந்த சமீபத்திய நடவடிக்கையின் மூலம் ஹை-டெக் பவர் நிறுவனத்தின் மொத்த சூரியஒளி மின்சக்தி 13.5 மெகாவாட் என்ற நிலையை எட்டியிருக்கிறது. இதன் காரணமாக மின்சாரத்திற்காகவும் செலவுகளை கணிசமாக குறைப்பதற்கு உகந்த நிலையில் இந்நிறுவனத்தை இது நிலைநிறுத்தியிருக்கிறது; மேலும் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ஈ எஸ் ஜி) ஆகிய பிரிவுகளிலான குறிக்கோள்களை நோக்கிய பயணத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்ற நடவடிக்கைகளையும் இந்நிறுவனம் எடுப்பதை இது சாத்தியமாக்கியிருக்கிறது. 2030-ம் ஆண்டிற்குள் 30% முதல் 35% மாசு உமிழ்வுகளை குறைக்கின்ற இலக்கோடு 2070-ம் ஆண்டிற்குள் பூஜ்ஜிய கார்பன் உமிழ்வுகள் என்ற நிலையை அடைவது என்ற செயல்திட்டத்தை இந்திய அரசு தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. இந்த குறிக்கோளை அடைவதற்கு சூரியஒளி மற்றும் காற்றின் மூலம் தயாரிக்கப்படும் மின்சக்தி வழியாக பசுமை ஆற்றல் உருவாக்கத்தை அரசு ஊக்குவித்து வருகிறது; அத்துடன் சுற்றுச்சூழலுக்கு தோழமையான பிற நடவடிக்கைகளையும் தனியார் துறையின் பங்களிப்போடு அரசு எடுத்து வருகிறது. இந்திய அரசின் இந்த தேசிய தொலைநோக்கு குறிக்கோளை அடைவதற்கான அரசின் முன்னெடுப்புகளோடு இணைந்து ஆதரவாக செயல்படுவதில் ஹை-டெக் பைப்ஸ் பெருமை கொள்கிறது.

ஹை-டெக் பைப்ஸ் லிமிடெட்-ன் தலைவர் திரு. அஜய் குமார் பன்சல் இந்நிகழ்வு தொடர்பாக கூறியதாவது: “5 மெகாவாட் தன்னக பசுமை மின்சக்தி பயன்பாடு தொடங்கப்பட்டிருப்பதன் மூலம் எமது பசுமை ஆற்றல் முன்னெடுப்புகளை மேலும் விரிவாக்குவதில் நாங்கள் பெரும் உற்சாகம் கொண்டிருக்கிறோம். மின்சாரத்திற்கான செலவுகளில் கணிசமான சேமிப்புகளுக்கு இந்நடவடிக்கை வழிவகுக்கும்; அத்துடன் நிலைப்புத்தன்மையுள்ள உற்பத்தி நடைமுறைகள் மீதான எமது பொறுப்புறுதியையும் மற்றும் சுற்றுச்சூழலை பேணுவதற்கான எமது பொறுப்பையும் இந்த முன்னேற்ற நடவடிக்கை தெளிவாக நிரூபிக்கிறது.”

# செலாங்கோர் வேளாண் மேம்பாடு கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டிருக்கும் ஹெச்எம்ஏ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

சென்னை, 24 அக் 2024: கையாளப்படும் உணவுகள் மற்றும் வேளாண் தயாரிப்புகளில் முதன்மை நிறுவனமாக இயங்கிவரும் ஹெச்எம்ஏ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், “பி கே பி எஸ்” அல்லது “செலாங்கோர் வேளாண் மேம்பாடு கழகம்” என்ற பெயருள்ள மலேசியாவின் செலாங்கோர் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு அரசு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருப்பதை அறிவித்திருக்கிறது. மலேசியாவின் செலாங்கோர் மாநிலத்தின் மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் இவ்வொப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடைபெற்றது. உறையவைக்கப்பட்ட எலும்பில்லாத எருமை மாட்டு இறைச்சியை வழங்குவதற்கும் மற்றும் இரு நிறுவனங்களின் நிபுணத்துவத்தை சிறப்பாக பயன்படுத்துவதன் மூலம் சவால்களுக்கு தீர்வுகாண கூட்டு ஆராய்ச்சி செயல்திட்டங்கள் உட்பட பிற முன்னெடுப்புகளை ஆராய்வது என்ற குறிக்கோள் அடிப்படையில் ஹெச்எம்ஏ மற்றும் பி கே பி எஸ்-க்கு இடையிலான இந்த கூட்டு ஒத்துழைப்பு செயல்பாட்டை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளடக்குகிறது. மலேசியாவிலும் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளை உள்ளடக்கிய ஏசியான் பிராந்தியத்திலும் ஹெச்எம்ஏ-வின் சர்வதேச செயல்தடத்தை விரிவாக்குவதில் ஒரு முக்கிய முன்னேற்ற நடைவடிக்கையாக இந்த கூட்டாண்மை திகழ்கிறது. நிறுவனத்தின் உலகளாவிய சந்தை அணுகுவசதியை இக்கூட்டாண்மை மேம்படுத்தும். இந்தியாவுக்கும், மலேசியாவுக்கும் இடையே மேம்பட்ட வர்த்தக உறவுகளை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேலும் பேணி வளர்க்கும்; வேளாண்மை மற்றும் உணவு பதப்படுத்தல் துறைகளில் இரு தரப்பு வளர்ச்சியை இது ஊக்குவிக்கும். பொதுவாக இத்தகைய தொழில்துறை பிரிவுகள் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்க கூட்டு ஆராய்ச்சி முன்னெடுப்புகளை இந்த இரு தரப்புகளும் எடுப்பதற்கு இது வழிவகுக்கும்; இறைச்சி பதப்படுத்தல் தொழில்நுட்பத்தில் முன்னேற்றங்களை கொண்டுவரவும் மற்றும் வழங்கல் சங்கிலி தொடர் செயல்பாட்டு திறனை மேலும் மேம்படுத்தவும் இது உதவும். பி கே பி எஸ்-ன் ஆதரவோடு மேம்படுத்தப்பட்ட வினியோக செயல்திறன்களை ஹெச்எம்ஏ கொண்டிருக்கும்; மலேசியாவிலும் மற்றும் பிற ஏசியான் சந்தைகளிலும் இறைச்சி தயாரிப்புகளுக்கு வளர்ந்து வரும் தேவையை எதிர்கொள்ள அவைகளின் நிலையான மற்றும் தரமான சப்ளையை இது உறுதிசெய்யும்.

எருமை மாடுகளை இறைச்சிக்காக வெட்டவும், குளிரூட்டவும், பதப்படுத்தி உறையவைக்கவும் மற்றும் அதன் பிறகு உறையவைக்கப்பட்ட, எலும்பில்லாத ஹலால் எருமை மாடு இறைச்சியை பேக்கிங் செய்யவும் பஞ்சாப்-ஐ சேர்ந்த ஏ எல் எம் ஃபுட் புராடக்ட்ஸ் லிமிடெட் (ஏ எல் எம் ஃபுட்) மற்றும் ஏ எல் எம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (ஏ எல் எம்), சஹரான்பூர் ஆகிய நிறுவனங்களோடு இதற்கான வசதிகளை பயன்படுத்திக் கொள்வதற்கான ஒப்பந்தங்களையும் ஹெச்எம்ஏ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் செய்து கொண்டிருக்கிறது.

# டாடா மோட்டார்ஸ் வர்த்தக வாகன வாடிக்கையாளர்களுக்காக ‘வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவம்‘ என்ற நாடுதழுவிய ஈடுபடுத்தல் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது




திருச்சி, 24 அக் 2024: இந்தியாவின் மிகப்பெரும் வர்த்தக வாகன உற்பத்தியாளரான டாடா மோட்டார்ஸ் ஆனது 24 டிசம்பர் 2024 வரை வர்த்தக வாடிக்கையாளர்களுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய ஈடுபடுத்தல் திட்டமான வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவம் 2024-ஐ அறிமுகப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இந்த தனித்துவமான மற்றும் விழுமியம்-கூட்டும் திட்டம், நாடுமுழுவதுமுள்ள 2500 அங்கீகரிக்கப்பட்ட சேவை மையங்களில் நடத்தப்படும் மற்றும் சரக்கு வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுனர்களுக்கு ஒருசேர நுண்ணறிவு சார்ந்த உரையாடல்களின் பொருட்டு அவர்கள் சங்கமிக்கும் வாய்ப்பை நல்கும். இந்த மகோத்சவம் மூலம் வாடிக்கையாளர்கள் பயிற்சி பெற்ற டெக்னிஷியன்களால் மேற்கொள்ளப்படும் முழுமையான வாகன பரிசோதனைகள் மற்றும் விழுமியம்-கூட்டப்பட்ட சேவைகளுக்கான அணுகல் உள்ளிட்ட பன்முகப்பட்ட நன்மைகளின் விரவலை பெற்று பயனடையலாம். கூடுதலாக நிறுவனத்தின் சம்பூர்ண சேவா 2.0 முன்முயற்சியின் கீழ் ஓட்டுனர்கள் தனிப்பயனாக்கப்பட்ட நன்மைகளுடன் பாதுகாப்பான மற்றும் எரிபொருள் திறன்சார்ந்த ஓட்டும் வழிமுறைகள் ஆகியவற்றை பற்றிய பரந்த பயிற்சியையும் பெறுவார்கள்.

வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவம் 2024 பதிப்பை டாடா மோட்டார்சின் செயல்பாட்டு அதிகாரி திரு கிரிஷ் வாக் அறிமுகப்படுத்தி கூறுகையில், "23 அக்டோபர் ஆண்டு தொடங்கவிருக்கும் வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவத்தை இந்த ஆண்டு மீண்டும் வழங்குவதை பற்றி நாங்கள் பேருவகை கொண்டுள்ளோம். இன்றைய தினம் எங்களுக்கு விசேஷமான முக்கியத்துவத்தை கொண்டுள்ளது ஏனெனில் இதே தினத்தில்தான் நாங்கள் 1954-ல் எங்களது முதல் வர்த்தக வாகனத்தை விற்பனை செய்தோம் மற்றும் இந்த தினத்தையேதான் நாங்கள் வாடிக்கையாளர் பராமரிப்பு தினமாக அனுஷ்டிக்கிறோம். இந்த மகோத்சவம் ஆனது கவனமான வாகன பரிசோதனைகள் மற்றும் பன்முகப்பட்ட நன்மைகள் ஆகியவற்றின் மூலம் பெஸ்ட்-இன்-கிளாஸ் சேவையை நாங்கள் வழங்குவது தொடர்பான எங்களின் அர்பணிப்பை பிரதிபலிக்கிறது. இந்த மகோத்சவம் மூலம் நாடுமுழுதுமுள்ள ஒவ்வொரு டச்பாயின்டிலுமுள்ள ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் குதூகலத்தை தருவதை உறுதிபடுத்துவதன் மூலம் எங்களது அனைத்து பங்காளர்களுடனுமான எங்கள் உறவை உறுதிபடுத்த இலக்கு கொண்டுள்ளோம். அனைத்து வாடிக்கையாளர்களையும் அவர்களுக்கு அருகிலுள்ள டாடா அங்கீகரிக்கப்பட்ட சேவை மையத்திற்கு வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் மற்றும் இந்த முன்முயற்சியானது அவர்களின் வர்த்தகங்களுக்கு குறிப்பிடத்தக்க விழுமியத்தை சேர்க்கும் என்று நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம்," என்று விளக்கினார்.

டாடா மோட்டார்சின் மிக அகண்ட வர்த்தக வாகனங்களின் தொகுப்பிற்கு நிறுவனத்தின் சம்பூர்ண சேவா 2.0 முன்முயற்சியின் மூலம் கிடைக்கப்பெறும் முழுமையான வாகன வாழ்க்கைசுழற்சி நிர்வாகத்துக்கான விழுமியம்-கூட்டப்பட்ட சேவைகள் மூலம் வலுசேர்க்கப்படுகின்றன. இந்த அனைத்தையும் உள்ளடக்கும் தீர்வானது வாகனம் வாங்கப்படுவதிலிருந்து தொடங்குகிறது மற்றும் வாகனத்தின் வாழ்க்கைசுழற்சி முழுதுமுள்ள ஒவ்வொரு செயல்பாட்டு அம்சத்தையும் ஆதரிக்கிறது, அதாவது பிரேக்டவுன் உதவி, உத்தரவாதமளிக்கப்பட்ட பணி பூர்த்தி அவகாசங்கள், வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தங்கள் மற்றும் நியாயமான உதிரி பாகங்களுக்கான வசதிமிக்க அணுகல் ஆகியன உள்ளிட்ட செயல்பாட்டு அம்சங்கள். கூடுதலாக டாடா மோட்டார்ஸ் ஆனது சிறப்பான சரக்கு போக்குவரத்து நிர்வாகத்திற்கான வலைத்தொடர் வாகன தளமான ஃப்ளீட் எட்ஜ்-ஐ திறம்பட பயன்படுத்துகிறது மற்றும் இது உரிமையாளர்கள் தங்கள் வாகனங்களின் தயார்நிலையை அதிகபட்சமாக்கவும் உரிமையாக்கி கொள்ளலின் மொத்த விலையை குறைக்கவும் உதவுகிறது.

# ஹோண்டா மோட்டார்சைக்கிள் அண்ட் ஸ்கூட்டர் இந்தியா நிறுவனம், ‘இந்தியாவின் முதல் 300சிசி ஃப்ளெக்ஸ்-ஃபியூயல் மோட்டார் சைக்கிள்’ ஆன சி பி 300 எஃப் ஃப்ளெக்ஸ்-ஃப்யூயல் ஐ அறிமுகப்படுத்துகிறது




சென்னை, 24 அக் 2024: ஹோண்டா மோட்டார்சைக்கிள் அண்ட் ஸ்கூட்டர் இந்தியா (எச் எம் எஸ் ஐ) இன்று சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து தீர்வுகளுக்கான நாட்டின் மாற்றத்தில் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையைக் குறிக்கின்ற புதிய சி பி 300 எஃப் ஃப்ளெக்ஸ்-ஃபியூயல் மோட்டார் சைக்கிள் இன் அறிமுகத்தை இன்று அறிவித்தது. சுற்றுச்சூழலில் அக்கறை கொண்ட ரைடர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இது இந்தியாவின் முதல் 300சிசி ஃப்ளெக்ஸ்-ஃபியூயல் மோட்டார்சைக்கிள் ஆகும். வாடிக்கையாளர்கள் இப்போது 2024 ஹோண்டா சி பி 300 எஃப் ப்ளெக்ஸ்-பியூயல் மோட்டார்சைக்கிளை தங்களுக்கு அருகிலுள்ள பிக்விங் டீலர்ஷிப்களில் முன்பதிவு செய்யலாம் மேலும் இது ரூ. 1,70,000 (எக்ஸ்-ஷோரூம், டெல்லி) விலையில் கவர்ச்சிகரமாக விலையிடப்பட்டுள்ளது.

இந்த புதிய சி பி 300 எஃப் ஃப்ளெக்ஸ்-ஃபியூயல் மோட்டார்சைக்கிளை அறிமுகப்படுத்திய, ஹோண்டா மோட்டார்சைக்கிள் அண்ட் ஸ்கூட்டர் இந்தியாவின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு. சுட்சுமு ஒடானி கூறுகையில், "ஹோண்டாவில், 2050 ஆம் ஆண்டிற்குள் எங்களின் அனைத்து தயாரிப்புகள் மற்றும் கார்ப்பரேட் செயல்பாடுகளுக்கு கார்பன் நடுநிலைமையை அடைவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். சுற்றுச்சூழல் உகந்த தயாரிப்பு கண்டுபிடிப்புக்கான எங்கள் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, சி பி 300 எஃப் இன் புதிய ஃப்ளெக்ஸ்-ஃபியூயல் மாடலை இன்று நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம், இது உமிழ்வைக் குறைப்பது மற்றும் இந்தியாவின் ஆற்றல் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான எங்கள் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையைக் குறிக்கிறது. உலகளவில் ஃப்ளெக்ஸ்-ஃபியூயல் தொழில்நுட்பத்தில் பத்தாண்டுகளுக்கும் மேலான நிபுணத்துவத்துடன், இந்திய இரு சக்கர வாகன சந்தையில் ஒரு தடையற்ற நெகிழ்வு-எரிபொருள் மாற்றத்தை உருவாக்க இந்திய வாடிக்கையாளர்களை மனதில் வைத்து ஹோண்டா நிறுவனம் இந்த மோட்டார்சைக்கிளை சிறப்பாக உருவாக்கியுள்ளது. இந்த புதிய சி பி 300 எஃப் ஃப்ளெக்ஸ்-ஃபியூயல் மோட்டார்சைக்கிளின் இந்த வெளியீடு, இந்திய அரசின் எத்தனால் கலந்த பெட்ரோல் (ஈ பி பி) திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்கும் மற்றும் ஒரு தூய்மையான, சுற்றுச்சூழல் நட்பு எதிர்காலத்திற்கு பங்களிப்பதற்குமான எங்கள் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது." என்றார்.

ஹோண்டா மோட்டார்சைக்கிள் அண்ட் ஸ்கூட்டர் இந்தியா நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் இயக்குநர் திரு. யோகேஷ் மாத்தூர் இந்த அறிமுகம் குறித்துக் கூறுகையில், “இந்திய வாடிக்கையாளர்கள் வெறும் செயல்திறன் சார்ந்து மட்டுமல்ல, சுற்றுச்சூழலுக்கும் நிலையான மோட்டார்சைக்கிள்களை அதிகளவில் கோருகின்றனர். இந்த ஹோண்டா சி பி 300 எஃப்ஃப்ளெக்ஸ்-ஃப்யூயல் மோட்டார்சைக்கிளானது, நவீன தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் உணர்வு ஆகியவற்றின் சரியான ஒரு இணைவு ஆகும், இது ஹோண்டாவின் புகழ்பெற்ற நம்பகத்தன்மை மற்றும் செயல்திறனை உறுதிப்படுத்துகின்ற அதே வேளையில் ரைடர்களுக்கு நெகிழ்வு-எரிபொருள் விருப்பத்தின் சுதந்திரத்தை வழங்குகிறது. இந்த புதிய விருப்பத்தை சந்தையில் கொண்டு வருவதிலும், பிரீமியம் மோட்டார்சைக்கிள் பிரிவில் புதிய வரையறைகளை அமைப்பதிலும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்." என்றார்.